# சங்கத் தமிழர் வேளாண்மை

***திருமதி சி. மகாலட்சுமி***
உதவிப்பேராசிரியர் (ம) துறைத்தலைவர், தமிழ்த்துறை
ஆதிபராசக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
இராணிப்பேட்டை மாவட்டம்
https://doi.org/10.5281/zenodo.14383172

**ஆய்வுச்சுருக்கம்**

*இயற்கை எழில் வாய்ந்த பாரதப் பூமியான இப்புண்ணிய பூமியில் மனிதனின் வாழ்வியல் நிலத்தை அடிப்படையாகக் கொண்டே அமைகிறது. தன் தேவைகளை பூர்த்தி செய்யவும், பொருளாதார உற்பத்தியை பெருக்கவும் உழவுத் தொழிலை தமிழர்கள் மேற்கொண்டனர். உயிர் வாழத் தேவையான உணவைப் பெற்று வாழும் சமுதாயமாக சங்க கால சமுதாயம் விளங்கியது. உழவின் இன்றியாமையை உணர்ந்து விளைச்சலை பெருக்கி உழவுத்தொழிலில் முதன்மை பெற்றவர்களாக சங்கத் தமிழர்கள் விளங்கினர். சங்க காலத்தில் உழவின் சிறப்பு, நிலப்பாகுபாட்டு வாழ்க்கை முறை வேளாண்மைத் தொழிலின் நுட்ப உத்திகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு அமைகிறது.*

**முன்னுரை**

*தொல் பழங்காலம் தொட்டு மனிதனின் வாழ்க்கை இயற்கையோடு இயைந்த வாழ்க்கையாகவே இருந்துள்ளது. மனிதன் எழுத படிக்கத் தெரியாத வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே வேளாண்மை செய்து உணவை பெறும் முயற்சியில் தமிழர்கள் ஈடுபட்டனர் என்பதை இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. நாகரீக வளர்ச்சியின் பயனாக வேளாண்மை மக்களின் வாழ்வியலோடு ஒன்றி இருக்கிறது. அத்தகைய வேளாண் தொழில் சங்கத் தமிழர்களின் வாழ்வியலில் இரண்டற கலந்து நிற்பதை வெளிப்பிடுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.*

**நானிலப் பாகுபாடு**

*சங்ககாலத் தமிழர்கள் திணைச்சமுதாய வாழ்வு வாழ்ந்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு நில மக்களின் வாழ்க்கை இயற்கைச் சூழலை மையமாகக் கொண்டவை. குறிஞ்சி நில மக்கள் வாழ்வு வேட்டைத் தொழிலையும் புன்செய் வேளாண்மையும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்கிறது. முல்லைநில மக்களின் வாழ்வு கால் நடையையும், மருதம் நெய்தல்நில மக்களின் வாழ்வு நன்செய் வேளாண்மையை அடிப்படையாக கொண்டதாக இருந்துள்ளது (பெ.மாதையன், சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம், பக்.11-12) எனினும் உணவு உற்பத்திக்கான அடிப்படை ஆதாரமாக மருதநிலம் விளங்கியுள்ளது. உழவுத்தொழில் சிறந்து உணவுப்பெருக்கம் அதிகரித்தது மருதநிலத்தில் தான் என்பதை இலக்கியங்கள் மூலம் அறியலாம். நானிலப் பாகுபாட்டினை,*

> ***சமாயோன் மேய காடுறை உலகமும்***
> ***சேயோன் மேய மைவரை உலகமும்***
> ***வேந்தன் மேய தீம்புனல் உலகமும்***
> ***வருணன் மேய பெருமணல் உலகமும்***
> ***(தொல்.பொருள்.நூ.5)***

*என தொல்காப்பியம் எடுத்தியம்புகிறது.*

**உழவுத்தொழிலின் இன்றியமையாமை**

*உலகம் நவீன வளர்ச்சியை நோக்கி சென்றாலும் மனிதன் உயிர்வாழ அடிப்படையான*

தேவை உணவு. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தேரே' என மணிமேகலை கூறும். உணவை விளைவிக்கும் தாயாக உழவு விளங்குகிறது. உழவு செய்யும் விளை நிலங்களை சங்க இலக்கியம் வன்புலம், மென்புலம் என இரண்டாகப் பாகு படுத்தியுள்ளது. வேளாண்மை செய்வதற்கு ஏற்ற நிலமாகவும், நீர்வளம் அதிகமுள்ள நிலமாகவும் மருதநிலம் இருப்பதால் மென்புலம் என்று தமிழர்கள் கூறினர் (முனைவர் ஆ.பூபாலன், தமிழரும் தொழில்நுட்பமும், ப.169). என்று குறிப்பிட்டுள்ளார். இதனை,

**மென்புல வைப்பின் நன்நாட்டுப் பொருந**

**(புறம்.பா.எ.42:15)**

எனும் பாடல் மூலம் அறியமுடிகிறது.

இத்தகு உலகத்தார்க்கு அச்சாணியாக விளங்கக்கூடிய உழவுத்தொழிலின் மேன்மையை,

**உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது**
**எழுவார் எல்லாம் பொறுத்து (குறள்.1032)**

என்ற குறள் வெளிப்படுத்துகிறது.

## நன்செய் வேளாண்மை

மருத நிலத்தில் தான் அதிகமாக நன்செய் வேளாண்மை நடைபெறுகிறது. வேளாண் உற்பத்தியைப் பெருக்க, புதர்கள், காடுகளை அழித்து விளைநிலமாகத் தமிழர்கள் பண்படுத்தினர். நிலத்தின் தன்மைக்கேற்ப, வேளாண்மை செய்தனர்.

**காடுகொன்று நாடக்கிக்**
**குளந்தொட்டு வளம்பெருக்கி**

**(பட்டினப்பாலை. அடி.283-285)**

எனும் வரிகள் உழுது பயிரிட நீர்நிலைகள் ஏற்படுத்தி, உணவுப் பெருக்கத்திற்கு வித்திடுவதாக அமைகிறது. நிலத்தை பண்படுத்தி உழுத நிலங்களில் எருவாக இலைகளையும், தழைகளையும், சாணத்தையும் பயன்படுத்தினர். இதனையே,

**காஞ்சித் தாது உக்கன்ன தாது எருமன்றத்து**

**(கலித்.பா.எ.108:60)**

இப்பாடல் மூலம் அறியலாம். மேலும்,

**ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு (குறள்.1038)**

எனும் குறள் மூலம் இக்கருத்தையே வள்ளுவரும் சுட்டிச் செல்கிறார்.

## வேளாண் பயிர்கள்

"அகல உழுதலை விட ஆழ உழுதல் நன்று" என்பது பழமொழி. உழுத நிலத்தில் மருதநில மக்கள் தங்கள் பொருளாதார முன்னேற்றத்திற்கான நெல், கரும்பை பயிரிட்டதாகவும், சங்க இலக்கியத்தில் நெல் முதன்மை பெற்றதாகவும் அறியமுடிகிறது.

**நெல்பல பொலிக பொன்பெரிது சிறக்க**

**(ஐங்.பா.எ.1:2)**

எனும் வரிகள் நெல்லை முதன்மைப்படுத்தி உள்ளது. செந்நெல், வெந்நெல் போன்ற நெல் வகைகளும் மருதநில வயல்களில் விளைவிக்கப்பட்டன. கடவுளை வணங்கும் போதும் நெல் தூவி வழிபட்டதாக சங்க இலக்கியங்கள் வழி அறியலாம்.

**நெல்லுகுத்துப் பரவுங் கடவுளும் இலவே**

**(புறம். பா.எ.335)**

எனும் வரிகள் புலப்படுத்தும். மேலும்,

**கரும்பின் பாத்தி பூத்த நெய்தல் (பதிற்.பா.எ.13)**

எனும் வரிகள் கரும்பை நட்டு உணவு உற்பத்தியையும், பொருளாதாரத்தையும் தமிழர்கள் மென்மேலும் பெருக்கினர் என்பதையும் எடுத்துரைக்கிறது.

## வேளாண் தொழில் நுட்பம்

வேளாண்மைப் பயன்பாட்டுக் கருவிகளுள் முக்கியமானது கலப்பை ஆகும் உழவுக் கருவிகளை உருவாக்கவும் பயன்படுத்தவும் பழந்தமிழர்கள் கற்றிருந்தனர். பழந்தமிழ் இலக்கியத்தில் கலப்பை 'ஏர்' என்றும் 'நாஞ்சில்' என்றும் வழங்கப்படுகின்றன.

**நெடுநல் அடைச்சிய கழனி ஏர்புகுத்து**

**(அகம்.பா.எ.41:4)**

எனும் பாடலில் 'ஏர்' எனும் சொல் கையாளப்பட்டிருப்பதை அறியலாம். மேலும்,

**ஈரம்பட்ட செவ்விப் பைம்புனத்து**
**ஓர் ஏர் உழவன் போல (குறுந்.பா.எ.131:4-5)**

எனும் குறுந்தொகைப் பாடல் ஈரநிலத்தை காய்வதற்கு முன் உழ முற்படும் உழவன் பற்றிக் குறிப்பிடுகிறது.

இப்பாடலின் வழி உழவனின் வீரமும், விடா முயற்சியும் விளைநிலத்தை உயிரெனக்

கருதி, ஏர்தொழிலை தெய்வமாக வணங்கியதையும் அறியமுடிகிறது. இதனை சிறுபஞ்சமூலம் எனும் பாடலில்,

**நன்புலத்து வைஅடக்கி நாளும் ஏர்போற்றி**
**புன்புலத்தைச் செய்து எருப்போற்றியபின்**
**(சிறுபஞ்.பா.எ.58)**

உழவனின் இலக்கணம் பற்றி கூறுகிறது.

சங்கத் தமிழர்கள் வேளாண்தொழில் சிறந்து விளங்கியதாகவும், தன் தொழிலைக் கொண்டு வாழ்வில் தனக்கென தனி மாண்பை பெற்றவர்களாகவும் விளங்கினர். நாட்டை ஆளும் வேந்தனையே உழவனாக பாவித்து

**முழவுறழ் திணிதோளானை**
**உழவனாக உரைமலிந்தன்று**
**(புறப்.வெண்.வாகை.பா.எ.8)**

எனும் புறப்பொருள் வெண்பாமாலை பாடலில் கூறப்பட்டுள்ளது. இப்பாடல் உழவனின் மதிப்பை மிக உயர்ந்த நோக்குடன் வெளிக்காட்டுகிறது.

## முடிவுரை

சங்க இலக்கியச் சான்றுகளின் வழி, பழந்தமிழர் அடிப்படைத் தேவைகளுள் முதலாவது உணவு ஆகும். உணவைப் பெற வேளாண் தொழிலை சங்கத்தமிழர்கள் சிறந்த முறையில் வளர்த்தனர் என்பதை அறிய முடிகிறது. மேலும் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், பெருக்குதல், விளை நிலங்களை பண்படுத்தி விரிவாக்குதல், உழவுத்தொழிலின் மேன்மை, வேளாண்மையில் நுட்பங்கள் எனும் பல வகைகளில் உழவு மேம்பாட்டின் பயனை எடுத்துரைக்கிறது. உழவுத்தொழிலானது செப்பமுற வளர் இளம்பருவத்தினர் அதன் இன்றியமையாமையை உணர்ந்து, உழவுத் தொழிலை பேணிப் பாதுகாத்து வளர்க்க வேண்டும்.

## துணைநூற் பட்டியல்


1. இராமசுப்பிரமணியம், வ.த., தொல்காப்பியம், பூம்புகார் பதிப்பகம், சென்னை - 108. பதிப்பு - மார்ச் 2008.
2. சிற்பி பாலசுப்பிரமணியன் (உரை), திருக்குறள், தாமரை பதிப்பகம், சென்னை - 98. ஐந்தாம் பதிப்பு - ஏப்பரல் 2018.
3. சுப்பிரமணியன்,ச.வே.,(உரை), சங்க இலக்கியம் எட்டுத்தொகை, மூலமும் தெளிவுரையும், தொகுதி-1,2,3, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை - 108.
4. சுப்பிரமணியன்,ச.வே.,(உரை), சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டு, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை - 108.
5. பசும்பொன்,க., சங்கத்தமிழர் வாழ்வியல், உலகத்தமிழ்ச்சங்கம், மதுரை.
6. பத்மதேவன்,(ம)தமிழ்ப்பிரியன் (உரை), நீதிநூல் களஞ்சியம், கொற்றவை பதிப்பகம், பதிப்பு 2014.
7. புலியூர்க் கேசிகன், புறப்பொருள் வெண்பாமாலை, சாரதா பதிப்பகம், சென்னை - 14. பதிப்பு ஆகஸ்ட் 2009.
8. பூபாலன்,ஆ., தமிழரும் தொழில்நுட்பமும், வி.ஆர்.பி.பப்ளிசர்ஸ், சென்னை, பதிப்பு 2023.
9. மாதையன்,பெ., சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட். சென்னை - 98. முதற் பதிப்பு - நவம்பர் 2004.